
# மாத்யமம தர்ம சமாஜம்

மாலை 36 ஜனவரி 2024 மலர் 1



நமது கிராமங்களில் அன்னாபிஷேகம்



ஸ்ரீ பஞ்சவடீஸ்வரர் ஆலயம், ஆனந்ததாண்டவபுரம்



ஸ்ரீ வ்யாக்ரபுரீஸ்வரர் ஆலயம் புலியூர்



கோனேரிராஜபுரம் ஸ்ரீ நடராஜர் புறப்பாடு



சேங்காலிபுரம் ஸ்ரீ சோளேஸ்வரர் ஆலயம்



திருக்கோடிகாவல் ஸ்ரீ திருகோடீஸ்வரர் ஆலயம்



மேலப்பாலையூர் ஸ்ரீ நடராஜமூர்த்தி வீதியுலா

Integrated
since 1974
Investments Simplified

# மாத்யம தர்ம சமாஜம்

5A, V Floor, Kences Towers,
1, Ramakrishna Street,
North Usman Road,
T. Nagar, Chennai - 600 017.

மாலை 36 | ஜனவரி 2024 | மலர் - 1 | விலை ₹ 50/-



Treasurer **K. Kalyanam . 9840062069**


**உறுப்பினர்களின் கவனத்திற்கு**

**விலாச மாற்றத்தை தெரிவிக்க** (SMS / email / whatsapp **மூலம் தெரிவிக்கலாம்)**

**மற்றும்** email id : mdsnewslettermaterials@gmail,com

**8248653471** மற்றும் **9841304358**

rsnathan54@gmail.com jayakamala@hotmail.com

**சமாஜத்தின் வெப்சைட்** vathima.com

<u>சமாஜ வங்கி கணக்கு விவரம் .</u>

**CITY UNION BANK**
Maadhyama Dharma Samajam, T.Nagar Main Branch,
Chennai - 600017.
S/B A/c No. 001001000028464
IFSC . CIUB0000001

# ஆங்கில புத்தாண்டு மற்றும்

# இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்



# நாம சங்கீர்த்தன விழா - 2023

– தினமலர் தொகுப்பிலிருந்து




இண்டகிரேடட் அகாடமி ஃபார் பர்ஃபார்மிங் ஆர்ட்ஸ், கிருஷ்ண கான சபா மற்றும் பாகவத சேவா டிரஸ்ட் இணைந்து நடத்தும், நாம சங்கீர்த்தன விழா – 2023, தி.நகர் கிருஷ்ண கான சபாவில் டிசம்பர் 6ம் தேதி துவங்கியது.

இதையொட்டி, தினமும் காலை முதல் மாலை வரை, பல்வேறு பாகவதர் குழுவினரின் நாம சங்கீர்த்தனம் நடந்தது. டிசம்பர் 10 காலை 8.00 மணிக்கு, மருதாநல்லூர் கோதண்டராம சுவாமிகள் முன்னிலையில், ஸ்ரீ ராதா கல்யாண உத்சவம் நடந்தது.

பின், மாலை 4.00 மணிக்கு, நாம சங்கீர்த்தனத்திற்கு பல ஆண்டுகளாக தொண்டு செய்து வரும் பாகவத பெரியோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதில், புதுக்கோட்டை நரசிம்ம பாகவதருக்கு, ‘சங்கீர்த்தன கலாநிதி’ மற்றும் பாலசுப்ரமணிய பாகவதருக்கு ‘சங்கீர்த்தன

சூடாமணி' விருதை, மதுரை ஸ்ரீசக்ர ராஜ ராஜேஷ்வரி பீடம் ஸ்ரீ ராமானந்த சரஸ்வதி சுவாமிகள் வழங்கினார்.

தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு மும்பை சுந்தர்ராம பாகவதர் மற்றும் குழுவினர் ஆஞ்சநேய உத்சவம் நடந்தது.

காஞ்சி காமகோடி பீடாதிபதி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் காணொளி வாயிலாக பங்கேற்றார்.

விழாவில், பாகவத சேவா டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் ஸ்ரீ கல்யாணராம பாகவதர், ஸ்ரீராம் குழும இயக்குனர் சுந்தரேசன், சிட்டி யூனியன் வங்கி நிர்வாக இயக்குனர் ஸ்ரீ காமகோடி, கிருஷ்ண கான சபா செயலர் ஸ்ரீ பிரபு மற்றும் கிருஷ்ண கான சபா முதன்மை நிர்வாக அதிகாரி ஸ்ரீமதி சாஷ்வதி ஆகியோர் பங்கேற்றனர்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பேசியதாவது.

பாகவத சேவா டிரஸ்ட் சார்பில், பாகவதர்களுக்கு செய்து வரும் உதவிகள் தொடர வேண்டும். ஜனவரி 22ம் தேதி அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகம் நடக்கிறது.

இதையடுத்து, மாநிலத்தில் உள்ள பழமையான ராமர் கோவில்களில், அன்றைய தினம் சிறப்பு பூஜைகள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

# திருச்சியில் சமாஜ சந்திப்பு

– ஸ்ரீமதி ஜானகி பாலசுப்ரமணியன் (குஞ்சு)



நமது மாத்யம சமாஜ அங்கத்தினர்களின் சந்திப்பு திருச்சியில் ஸ்ரீரங்கம் யோகா மஹாலில் 2–12–2023 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருச்சியில் வசிக்கும் மாத்யமர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். ஸ்ரீ கோபால்சுவாமி மாமா அவர்களின் தலைமையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டது மிகவும் சிறப்பு. RR சபா ஸ்ரீ சேகர், ஸ்ரீ சக்ரபாணி CUB (சேங்காலிபுரம்) ஆகியோரும் அவருடன் சேர்ந்து செயல்பட்டனர்.

சென்னையிலிருந்து ஸ்ரீ ராமசேது, ஸ்ரீ கல்யாணம், ஸ்ரீ ராஜகோபாலன் (கோபு), ஸ்ரீமதி பிங்கி ஜனனி அனைவரும் வந்திருந்து விழாவினை சிறப்பித்தனர். வழக்கம் போல் பெண்களுக்கான Wheel of Fortune, தம்போலா, லக்கி டிப் என பல சுவாரஸ்யமான விளையாட்டுகள் நடத்தப்பட்டன. பரிசு மழையில் நனைந்தனர். (வான்மழை துளிக்கூட பொழிய வில்லை என்ற வருத்தம் போய் விட்டது) ஸ்ரீமதி கிருஷ்ணவேனி சேகர் நிகழ்ச்சிகளை சுவாரஸ்யமாகவும், சுவையாகவும் தொகுத்து வழங்கினார். ஸ்ரீ கோபால்சுவாமி அவர்களின் மகன் ஸ்ரீ ராஜேஷ் அவர்கள் மிகச் சிறப்பாக உரையாற்றினார். நிகழ்ச்சியின் இறுதியில் திருச்சி ஸ்ரீ K.ரமேஷ் அவர்களின் பிரதான சீடர் ஸ்ரீ பாலகிரிஷ் அவர்களின் இன்னிசைக் கச்சேரியில் காதும், மனதும் குளிர்ந்தது. மிகச் சிறப்பான டின்னர் அனைவரின் வயிற்றையும் குளிர்வித்தது. திருச்சி நண்பர்கள் அனைவரும் ஒருவருடன் ஒருவர் சந்தோஷமாகப் பேசி பிரியும் நேரத்தில் அடுத்த சமாஜ சந்திப்பு எப்போது நடக்கும் என எண்ண வைத்தது. மொத்தத்தில் திருச்சியே புது மெருகேறி ஜொலிப்பது போன்றபிரமை எல்லோருக்கும் ஏற்பட்டது.

ஜெய் ஸ்ரீராம். ஜெய் ஹிந்த்.

## MDS Get-together at California USA
## - Smt. Vasantha Ramamurthy

Community events are a great way to bring people together to socialize and get to know each other . The connections you forge at these events can blossom into cherished friendships. The importance of these gatherings cannot be overstated, especially for diasporic communities. Such gatherings far away from home hold immense value, nurturing relations and celebrating culture and heritage.

Our beloved Vathimas in the Bay area in California had organized one such gathering on Dec 2 after almost 4 years. Mr.Neelakantan Gopalan and Mrs.Srividya Narayanan graciously hosted the event at their home in Saratoga, California.

It was a belated Deepavali party with fireworks and delicious potluck dinner. Around twenty families attended the event. Everyone was dressed in their ethnic best, and each family brought their signature recipe. From mouth watering bisi bele bath, to savory pakodas,  chaat and sweet payasam, the dinner table was a riot of colors and flavors.

Kids had a blast of time lighting up the leftover crackers from Deepavali - sparklers, chakarams and busvaanams. Adults indulged in lively chatter, meeting new people and catching up with old friends and family. It was a fantastic and memorable evening for everyone.

Here's to many more gatherings like this, keeping our communities connected !

# அகல் விளக்கு அனுபவம்
## (மும்பாய் ஸ்ரீ ஸ்ரீதர் மஹாதேவன்)

அகல் விளக்கில் ஓர் அகழ்வாராய்ச்சி,
சென்னை வெள்ளத்தில் கிடைத்த இலவச பயிற்சி,
இருளில் ஒளி தேடும் ஓர் புதிய முயற்சி,
காலச்சக்கரத்தின் சரியான சுழற்சி.

பின்னோக்கி செல்வதிலும் ஓர் சுவையுண்டு,
நடந்ததை அசைபோடுவதில் புதுவித சுகமுண்டு,
அகல் விளக்கொளியில் அமைதியான குளிருண்டு,
குடும்பத்தோடு கூடியுண்டால் கூடுதல் மணமுண்டு.

சக்தியிழந்த அலைபேசியின் அரிதான தளர்ச்சி கண்டு,
ஒவ்வொரு மணித்துளியும் அதிகமாய் நீள்வதுண்டு,
புதுமை பேசும் விஞ்ஞானமும் ஓர்நாள் வீழ்வதுண்டு,
பழமை போற்றிய மெய்ஞ்ஞானம் மறுபடியும் வெல்வதுண்டு!



# காசி பயண அனுபவம்

**–ஸ்ரீ விஸ்வநாதன்**



**ஹர ஹர மகாதேவா!!**

**நானும் இந்திராவும் 8–11–23 தேதி காசிக்கு புறப்பட்டு தீபாவளிக்கு கங்கையில் கங்கா ஸ்நானம் செய்து விட்டு, காசி விஸ்வநாதர் ஸ்வாமி அன்னபூரணி மற்றும் விசாலாட்சி தாயார்களை தரிசித்துவிட்டு 14ம் தேதி சென்னை திரும்பினோம். நல்ல யாத்திரை.**

**எங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறோம்.**

1) **எல்லா தினங்களிலும் கேதார் காட்–ல் ஸ்நானம் செய்துவிட்டு, படித்துறையில் மேல் உள்ள கேதாரேஸ்வருக்கு அபிஷேகம் செய்து விட்டு வெளியில் புறப்படுவோம். எல்லா நாட்களிலும் இந்த வசதி உள்ளது.**

2) **காசி விஸ்வநாதர் ஆலயத்தில் ருத்ராபிஷேகம் செய்து 'ஸ்பரிச தரிசனம்' செய்தோம். இவற்றை சிலரின் சிபாரிசின் பேரில் 2 தடவைக்கு மேல் செய்தோம். ஒருமுறை காஞ்சி பெரியவர் அங்கு வருவதை ஒட்டி அந்த க்ரூப்பில் இணைந்து மீண்டும் ஸ்பரிச தர்சனம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. ஸ்பரிச தரிசனம் என்பது ஸ்வாமிக்கு நாமே தொட்டு அபிஷேகம் செய்வது.**

3) **தங்க அன்னபூரணி தரிசனம், லட்டு தேர் அலங்காரம் சென்று சேவித்தோம். விசாலாட்சி தாயார் தரிசனமும் செய்தோம்.**

4) 25–30 கி.மீ. தள்ளி உள்ள மார்கண்டேய மகாதேவர் என்ற ஷேத்திரத்தில் ருத்ராபிஷேகம் செய்தோம். இங்கும் கங்கை நதி ஒடுகிறது.

5) சங்கட்ஹர ஆஞ்சநேயர், துர்கா ஆலயம், காலபைரவர் ஆலயங்களுக்கு சென்று மூர்த்திகளை தரிசித்தோம்.

6) மாலை 6 மணிக்கு கங்கை நதியில் போட்டில் பயணித்து, ஆரத்தி சேவா, மற்றகாட்– களையும் காண்பிக்கிறார்கள்.

7) காஞ்சி காமகோடி விஜேயந்திர ஸ்வாமிகளை தரிசித்து, பிக்ஷாவந்தனம் செய்தோம்.

பொதுவான விஷயங்கள்

அ) காசி விஸ்வநாதர் ஆலய காம்ப்ளெக்ஸ் விஸ்தரிக்கபட்டு அழகாக மேம்படுத்தி உள்ளார்கள். எல்லா சௌகரியங்களும் உள்ளே அமைந்துள்ளது.

கோவிலிலிருந்தே கங்கையை அடைய ஒரு புதிய படித்துறை அமைத்துள்ளார்கள். ஆனால் பாதுகாப்பு மிக மிக அதிகம்.

ஆ) ஹர ஹர மகா தேவ, நம பார்வதி பதயே என உணர்வுபூர்வமாக பலரும் கோஷமிடுகிறார்கள்.

கங்கையை 'மா கங்கா' என தான் அழைக்கிறார்கள். ஒரு பாத்திரத்தில் கங்கை தண்ணீர் எடுத்துக் கொண்டு புஷ்பம் பிரசாதத்துடன் கோவிலுக்கு வந்து நேரடியாக அபிஷேகம் செய்கிறார்கள்.

இ) தீபாவளி சமயத்தில் எங்கு பார்த்தாலும் ஸ்வீட் ஸ்டால்கள் தான். முக்கியமாக பாலில் செய்த ஸ்வீட்கள் தான் அதிகம்.

ஈ) எல்லா கோவில்களிலும் முக்கியமாக அன்னபூரணி கோவிலில் ஸ்வீட் அலங்காரம் அழகாக உள்ளது. எவ்வளவு வகை ஸ்வீட்டுகள். பிரமிப்பாக உள்ளது.

2 மணி நேரத்திற்கு மேல் க்யூவில் நிற்க வேண்டும்.

உ) பெரிய பெரிய வியாபாரக் கடைகள் மிகுதியாக உள்ளன.

Online payment பரவலாக எல்லா இடத்திலும் உள்ளது. சாலை வியாபாரிகள் கூட அதிக அளவில் உபயோகிக்கிறார்கள்.

உ) பட்டாசு வெடிப்பது மிக குறைவு. ஆனால் எல்லோரும் தீபம் ஏற்றுகிறார்கள்.

எ) சாலையில் எந்த இடத்திலும் CM/PM/BJP சுவரொட்டிகளை பார்க்கவே இல்லை. ஆச்சரியமாக உள்ளது.

ஏ) ஹிந்தி தெரியாவிட்டால் ஒன்றுமே செய்ய முடியாது. எல்லாம் ஹிந்தி தான். ஆங்கிலம் என்பதே கிடையாது. தமிழ் நாட்டை தவிர இதர மாநிலத்திலிருந்து வருபவர்கள் ஒரளவு ஹிந்தி பேசுகிறார்கள். ஆந்திர மாநிலத்திலிருந்து அதிக அளவில் யாத்திரிகர்கள் வந்துள்ளனர்.

ஐ) நமது மாநிலத்திலிருந்து வருபவர்கள் பலரும் ஹனுமான் காட், சோனார் பேட் என்ற இடங்களில் தான் தங்குகிறார்கள். பழமையான இடம். குறுகிய சாலைகள்.

ஒ) 2-Wheeler எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

ஓ) ஆனால் ஊர்வாசிகள், ரிக்ஷாவாலா போன்றவர்கள் மிகவும் மரியாதையுடன் பழகுகிறார்கள்.

ஔ) காசி க்ஷேத்திரம் அவசியம் பார்த்து, கங்கையில் ஸ்நானம் செய்து, விஸ்வநாதரை தரிசிப்பது மிகவும் புண்ணியம்.

## மார்கழி இசை விழாவில் மாத்யமர்கள்

சென்னையில் ஒவ்வொரு டிசம்பரிலும் மார்கழி இசை விழா நடத்தப்படுகிறது. சென்னை மற்றும் அன்றி உலகெங்கிலும் உள்ள பாரம்பரிய இசைக் கலைஞர்கள் தங்கள் திறமைகளை மார்கழி விழாவில் வெளிப்படுத்துகின்றனர்.

இந்த இசைவிழாவில் நமது சமூகத்தைச் சார்ந்த பல வளரும் கலைஞர்கள் மற்றும் மூத்த இசைக் கலைஞர்கள் பெருதும் பங்கேற்றனர்.

❖ இசை பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்த முடிகொண்டான் ஸ்ரீ S.N.ரமேஷ் அவர்கள் ஒரு சிறந்த வைணிகர். இவர் தனது சீடரும் மகளுமான விதூஷி R.சௌமியாவுடன் இந்த வருட இசை விழாவில் ஸ்ரீ வாராஹி சன்னிதி, நாத சுதா மற்றும் நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவிலில் வீணை கச்சேரி வழங்கியுள்ளார்.

ப்ரம்ம கான சபா சார்பில் வழங்கப்படும் கான சரஸ்வதி டி கே பட்டம்மாள் மெமோரியல் அவார்டு (ஸ்ரீமதி நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களால் நிறுவப்பட்டது) இந்த ஆண்டு ஸ்ரீ ரமேஷ் அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டார். இது மிக பெருமைக்குரிய விருது ஆகும்.

❖ பிரபல கர்நாடக இசைப்பாடகி ஸ்ரீமதி K.காயத்ரி ப்ரசன்னா அவர்கள் அனைத்து முன்னணி சபாக்களிலும் இம்முறை பாடியுள்ளார். மியூசிக் அகாடமி, நாரத கான சபா, பார்த்தசாரதி சபா என சென்னையில் உள்ள பிரதான சபா அனைத்திலும் 13 இசை

கச்சேரிகளும், ‘கந்தர்வ லோகத்தில் ஒரு இசை மாநாடு‘ என்ற இசை நாடகத்திலும் பங்கேற்றார்.

**இந்த வருடத்திற்கான மியூசிக் அகாடமி வழங்கிய மிகவும் மதிப்புமிக்க விருதான ""Yogam Nagaswamy award"" இவருக்கு வழங்கப்பட்டது. இது பெருமைக்குரிய விருது ஆகும்.**

Review written by Sri Rajagopalan (Gopu) for the Jan, 02, 2024 edition of Sangeeth Sarathy, the in-house newsletter of Sri. Parthasarathy Swami Sabha

A brief note on the scholarly session on Varnams presented by the team - Dr. Sankari Krishnan, Dr. Gayatri Kamakoti, Dr. NJ Nandini

**VARNAMS: The Foundation of Voice, Rhythm, and Improvisation**

Presented by three 'Doctors' on stage, the lecdem on varnams, expectedly was a scholarly session.

Gayatri spoke about the RagamAlika varnam composed by Smt. Suguna Purushothaman on the Priya ragams viz. Karaharapriya, Shanmukhapriya, Rasikapriya and others. The ethukadai swaram in Rasikapriya being the highlight. She also referred to her varnam in the Pancharatna gana ragas viz. Nattai, Gowla, Arabhi, Varali and Sri. The Bhairavi ata tALa varnam was discussed next and it was observed that it has no muthAippu.

Mohanam Varnam was the next and with the two swaras 'ga' and 'ri' how it lends itself well for both swara and tAnam singing was demonstrated.

The discussion shifted gear to the Layam aspect and how it is very important in Varnams. The presenters spoke about the handling of various nadais and how to sing effectively in first and second speed, in tisram and chatusram and the combinations in Adi tALam. Gayatri spoke about her 'checkpoint in each' - for example tisram and Khandam - as against 3-3-3, 4 & 5 in the 'sAmidayajUda' varnam in Kedaragowlai. The misra nadai in ata tALam in 'ViribhOni' varnam was taken up next.

It was the turn of tAna varnams next. Thereon the 'mukhi'talams viz. Panchamukhi, Sarvamukhi and Saptamukhi were broached upon. The Sashabda and nishabakriyas were highlighted. Overall an educative and informative session it was with the scores of students and rasikas wanting more from the stellar team.

❖ **கர்நாடக சங்கீத இளம் பாடகி குமாரி சுபத்ரா ஸ்ரீதரன் (விஷ்ணுபுரம் ஸ்ரீ K.ஸ்ரீதரன் மற்றும் ஸ்ரீமதி வித்யா தம்பதியரின் மகள்) வித்வான் ஸ்ரீ டெல்லி சுந்தர்ராஜன் அவர்களின் சிஷ்யை. இந்த இசை விழாவில் சென்னையில் உள்ள 9 முன்னணி சபாக்களில் கச்சேரி வழங்கினார்.**

❖ **வளரும் கலைஞர் குமாரி ஆர்யா நாகராஜன் (தேதியூர் ஸ்ரீ நாகோஜி மற்றும் ஸ்ரீமதி யோகிதா அவர்களின் மகள்) வித்வான் R.சதீஷ் குமார் அவர்களின் சிஷ்யை. இவர் 2 முன்னனி சபாவிலும், 1 கச்சேரி இணையத்திலும் வழங்கினார்.**

**நமது உறுப்பினர் செம்மங்குடி ஸ்ரீ சேகர் அவர்கள் 19–12–23 அன்று ப்ரம்ம கான சபாவில் நடைபெற்ற இவரது இசை கச்சேரியின் விமர்சனம் உங்களுக்காக.**

Traditionally most of the parents of our community have encouraged their daughters to learn music more as a customary ritual than as a long-term goal, for instance, I have heard that Dr. Gnanam as a student used to be a regular winner in music competitions at school/college, but not trained to become an avowed musician

But, only in the recent years, notably there are some who have vigorously pursued their passion and taken to the next level, with K Gayathri being the forerunner, rather her success being the inspiration for many

Having said that, yesterday (19.12.2023) I seized the opportunity to attend the afternoon concert of Ms. Arya Nagarajan at PSHS Dakshinamurthy auditorium after being homebound for more than 2 years; it was indeed a wonderful concert, with varied choice of compositions and ragas, one of them being a rare one, not regularly heard in most of the concerts, Hindolam, being a raga most suitable either as the main raga or as a short concluding piece, was chosen for the main raga that gave her ample room for exploring the nuances, she aptly touched upon the Abhang too that has become the hallmark of most of the concerts of late, and Thirupugazh was

the highlight, as it is not commonly heard in many concerts, with excellent voice culture, she has all the ingredients to become a successful musician

But for the short duration of the concert, she would have exhibited more her vast knowledge and repertoire, wishing her more prime slots of longer durations in the years to come.

❖ மிருதங்க வித்வான் கோனேரிராஜபுரம் ஸ்ரீ வி. வரதராஜன் அவர்கள் 10–12–2023 அன்று வித்வான் ஸ்ரீ O.S.தியாகராஜன் வாய்ப்பாட்டிற்கு பக்கவாத்யம் வாசித்தார்.

❖ மிருதங்க இளம் வித்வான் திப்பிராஜபுரம் ஸ்ரீ ஹரிகிருஷ்ணா அவர்கள் நான்கு இசைக்கச்சேரிக்கு பக்கவாத்யம் வாசித்துள்ளார். குறிப்பாக மியூசிக் அகாடமியில் விதூஷி அனஹிதா, அபூர்வா சகோதரிகளுக்கு மிருதங்கம் வாசித்து அரங்கை அசரவைத்தார்.

❖ அமெரிக்காவில் வசிக்கும் ஸ்ரீ ஸ்ரீஹரி ராமன் (மாப்படுகை ஸ்ரீ A.V ராமன் அவர்களின் பேரன், ஸ்ரீ சங்கரன் அவர்களின் புத்ரன்) திருவாரூர் ஸ்ரீ வைத்தியநாதன் அவர்களிடம் மிருதங்கம் பயின்று வருகிறார். சென்னையில் இந்த சீசனில் மொத்தம் 18 கச்சேரிக்கு பக்கவாத்யம் வாசித்து தனது திறமையை நிரூபித்தார். 5 தினங்கள் 3 கச்சேரிக்கு தொடர்ந்து வாசித்தது பாராட்டக்குரியது ஆகும்.

❖ அமெரிக்காவில் வசிக்கும் இரட்டை சகோதரர்கள் ஸ்ரீ அனிருத் கணேசன் மற்றும் அபினவ் கணேசன் (மாந்தை ஸ்ரீ கணேசன் ஸ்ரீமதி புஷ்கலா அவர்களின் மகன்கள்), திருவாரூர் ஸ்ரீ வைத்தியநாதன் அவர்களிடம் மிருதங்கம் பயின்று வருகின்றனர். சென்னையில் இந்த

சீசனில் மொத்தம் 10 கச்சேரிக்கு மேல் பக்கவாத்யம் வாசித்துள்ளார்கள். இருவரும் சேர்ந்து 4 கச்சேரிகளுக்கு டபுள் மிருதங்கம் வாசித்து அசத்தியுள்ளார்கள்.

மார்கழி இசை விழாவில் பங்கேற்ற நமது உறுப்பினர்கள் அல்லது அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் சமாஜம் சார்பாக பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். அவர்களது கலை மேலும் சிறக்க, பல சாதனைகள் புரிய எல்லாம் வல்ல இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.



---



**திருமணம் - வாழ்த்துகள் / ஆசிர்வாதங்கள்**

❖ நமது உறுப்பினர் திப்பிராஜபுரம் ஸ்ரீ S.ராமசுவாமி அவர்களின் பௌத்திரனும், ஸ்ரீ கோபால் (PM374)– ஸ்ரீமதி ஸ்ரீவித்யா தம்பதியரின் குமாரனுமான சி G.மாதவ் க்கும் ஸ்ரீ ராஜாராமன்– ஸ்ரீமதி ஜெயந்தி அவர்களின் குமாரத்தி சௌ R.ஐஸ்வர்யா விற்கும் விவாஹம் 7–12–2023, வியாழக்கிழமை அன்று கும்பகோணத்தில் மிகவும் விமரிசையாக நடந்தேறியது.

சமாஜ சம்பாவனை– ரூ. 2000

## கோவில் நிகழ்ச்சிகள்

❖ ஆனந்ததாண்டவபுரம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ தேவி பூதேவி ஸமேத ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் **10–12–2023,** ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீவைகானஸ ஆகம முறைப்படி பக்த கோடிகள், கிராமவாசிகள் பெரும் திரளாக கலந்து கொண்டு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

❖ இண்டகிரேடட் அகாடமி ஃபார் பர்ஃபார்மிங் ஆர்ட்ஸ், கிருஷ்ண கான சபா மற்றும் பாகவத சேவா டிரஸ்ட் இணைந்து நடத்திய, நாம சங்கீர்த்தன விழா–2023, தி.நகர் கிருஷ்ண கான சபாவில் **06–12–23,** புதன்கிழமை முதல் **10–12–23** ஞாயிற்றுக்கிழமை வரை ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஆசியுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

❖ கோனேரிராஜபுரம் கிராமத்திலுள்ள அருள்மிகு உமா மகேஷ்வரர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு **18–12–2023,** திங்கட்கிழமை முதல் **27–12–2023,** புதன்கிழமை வரை திருவாதிரை உத்ஸவப் பெருவிழா சிறப்புறநடைபெற்றது.

❖ சேங்காலிபுரம் கிராமத்தில் 74வது ஸ்ரீ தத்த ஜெயந்தி வைபவம் **26–12–2023** செவ்வாய்க்கிழமை அன்று பக்தர்கள் பலர் கலந்து கொண்டு மிகவும் விமரிசையாக நடைபெற்றது. மறுநாள் **27–12–2023** புதன்கிழமை அன்று ஸ்ரீ தத்தாத்ரேயருக்கு தொட்டில் உத்ஸவமும் (பாலூட்டும் வைபவம்) சிறப்பாக நடைபெற்றது.

❖ முடிகொண்டான் கிராமத்தில் உள்ள ஸ்ரீ ஆலங்குடி ஸ்வாமிகளின், ஸ்ரீமத் பாகவத ப்ரவசன மண்டபத்தின், 17வது ஸம்வத்ஸர மஹோத்ஸவம், 18–1–24 அன்று துவங்கி 25–1–24ல் முடிய உள்ளது.

❖ அரசவனங்காடு கிராமத்தில் ஸித்தி அடைந்திருக்கும் நாகப்பட்டிணம் ஸ்ரீ ஸ்வயம் ப்ரகாசேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் வரகூர் ஸ்ரீ அச்சுதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை மஹோத்ஸவம் 02–01–2024 செவ்வாய்க்கிழமை மற்றும் 8–2–2024 வியாழக்கிழமை, அன்று அரசவனங்காடு பிருந்தாவன சேவா சமிதி அன்பர்களால் அரசவனங்காடு கிராமத்தில் விமரிசையாக நடைபெற்றது.

❖ திப்பிராஜபுரம் கிராமத்தில் 69–அம் அண்டு பாவை மஹோத்ஸவ விழா ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி திருக்கோவில் வளாகத்தில் 10–1–2024 புதன்கிழமை முதல் 12–1–2024 வெள்ளிக்கிழமை வரை 3 நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

❖ திப்பிராஜபுரம் பெருமாள் கோவிலில் ஸ்ரீ ருக்மணி சத்யபாமா ஸமேத ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவம் மருதாநல்லூர் பூஜ்ய ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் முன்னிலையில் 04–02–2024, ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது.



ஆனந்ததாண்டவபுரம்
ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில் யாகசாலை



ஆனந்ததாண்டவபுரம்
ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்



சேங்காலிபுரம் ஸ்ரீ தத்த ஜயந்தி உத்ஸவம்



அரசவனங்காட்டில் நாகப்பட்டிணம் ஸ்ரீ ஸ்வயம்
ப்ரகாசேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை



செம்மங்குடி ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில்
கூடாரவல்லி வைபவம்–பெண்கள் கோலாட்டம்



கோனேரிராஜபுரம் கூடாரவல்லி வைபவம்



மார்கழி மாத வீதி பஜனை- விஷ்ணுபுரம்



கனுப்பிடி வைத்தல் – திப்பிராஜபுரம்



கூடாரவல்லி சிறப்பு அலங்காரம்
கோனேரிராஜபுரம்



வைகுண்ட ஏகாதேசி சிறப்பு
அலங்காரம்-விஷ்ணுபுரம்



திருகோடிகாவல் ஸ்ரீ அபயஹஸ்த ஆஞ்சநேயர் திருக்கோயில்
ஹனுமத் ஜெயந்தி முன்னிட்டு  லட்ச்சார்ச்சனை



ஹனுமத் ஜெயந்தி சிறப்பு அலங்காரம்-தேதியூர்

# மாத்யமர்களின் நவராத்திரி கொலு



திப்பிராஜபுரம் ஸ்ரீ மாடி மணி மற்றும்
ஸ்ரீமதி பத்மா மணி தம்பதி இல்லத்தில் நவராத்ரி கொலு



சேங்காலிபுரம் ஸ்ரீமதி சுதா சுகந்த் இல்லத்தில்
நவராத்ரி தீம் கொலு



முடிகொண்டான் ஸ்ரீமதி புவனா வைத்தியநாதன்
இல்லத்தில் நவராத்ரி கொலு



ஸ்ரீமதி ஸ்வேதா & ஸ்ரீ பிரதாப் USA
இல்லத்தில் “சந்திரயான்“
Working Model தீம் கொலு



சேங்காலிபுரம் ஸ்ரீமதி புஷ்கலா ராஜ்
USA இல்லத்தில்



சேங்காலிபுரம் ஸ்ரீமதி பத்மாஸினி ராஜகோபாலன்
USA இல்லத்தில்

# மார்கழி கோலங்களில் மாத்யமரின் கைவண்ணம்



ஸ்ரீமதி புவனா வைத்து - முடிகொண்டான்



குமாரி சஞ்ஜனா கற்பகா சுகந்த் (ஸ்ரீ SRS அவர்களின் பேத்தி)
சேங்காலிபுரம்



திப்பிராஜபுரம் ஸ்ரீமதி விலாசினி நாராயணன் - சென்னை



தேதியூர் ஸ்ரீமதி சீதா விஸ்வநாதன் - சென்னை



விஷ்ணுபுரம் ஸ்ரீமதி வீழி ராஜி




ஸ்ரீமதி ஷோபனா நடராஜன்
(CUB Ex-Chairman ஸ்ரீ பாலசுப்ரமணியன் மகள்), சென்னை

## திருச்சியில் நடைபெற்ற MDS சந்திப்பு



இவ்விழாவின் ஏற்பாட்டாளர்
டால்மியா ஸ்ரீ N.கோபால்சுவாமி உரையாற்றுகிறார்



ஸ்ரீ ராஜேஷ் கோபால்சுவாமி அவர்கள் எழுதிய
"Open Our Minds" புத்தகத்தின் ஆய்வு



அங்கத்தினர்களின் விளையாட்டு போட்டி




ஸ்ரீ பாலகிரிஷ் குழுவினரின் இன்னிசை

## USA -ல் நடைபெற்ற MDS சந்திப்பு



USA Bay Area வில் MDS சந்திப்பு



இன்சுவை விருந்து

# MDS SKILL DEVELOPMENT CENTRE (Regd)
## GTE APPROVAL NO - 16809

**2024 MDS SDC WISHES YOU A VERY HAPPY NEW YEAR**

## JUNIOR EXECUTIVE TRAINEE PROGRAM WITH STIPEND (6 MONTHS)



**MS. M. SWETHA , B.Com**

Worked from September 2021 to September 2022. She got a job in Chennai at FOXCON India Pvt Ltd.



**MS. S. CHARULATHA, B.Sc**

Worked from October 2022 to March 2023. She got a job in Chennai at IT Centre.



**MS. R. NARMATHA, B.Com**

Worked from April 2023 to September 2023. She passed Typing Exam & working towards Government jobs.



**MS. J. BIRUNDHA, BBA**

Currently Working from October 2023. will finish training on March 2024.

## TRAINING OFFERED

- BASICS OF COMPUTER LEARNING
- OFFICE MANAGEMENT
- RECORD MAINTENANCE
- ADDITIONAL ADMIN WORKS & TALLY
- TEACHING STUDENTS

## COURSES OFFERED

- TYPEWRITING
- COA
- MS-OFFICE
- TALLY
- DESKTOP PUBLISHING
- INTERNSHIP PROGRAM

mdsskillcentre@gmail.com
8248653471 / 9840162295

West street
Semmangudi
Tiruvarur (dt) - 612603
Tamilnadu.

# சிவன் கோயில் கும்பாபிஷேகம். கோடி புண்ணியம்

ஒரு சிறிய சம்பவம் மூலமாக விளக்கியுள்ளோம்.

ஒரு நடுத்தர வயது இளைஞன் வெளியூரிலிருந்து ஜோசியர் ஒருவரை பார்க்க வந்தான். ஜாதகத்தை பார்த்த ஜோசியர் உடனே அதிர்ச்சி அடைந்தார். ஏனென்றால் அவனுடைய ஆயுள் அன்றைய இரவு முடியும் என்று ஜாதகத்தில் இருந்தது. ஆகையால் அவனை நாளைக்கு காலை சூரிய உதயத்திற்கு பிறகு வருமாறு சொல்லி அனுப்பி விட்டார். அவனும் சரி என்று சொல்லி கிளம்பி விட்டான்.

வெளியூர் ஆசாமி என்பதால் தங்க இடம் தேடி அலைந்து கடைசியில் கோவில் ஒன்றில் தஞ்சம் புகுந்தான். அந்த கோவில் இடிந்து விழுந்த பாழடைந்த சிவன் கோவில். அதன் தற்போதைய நிலையை நினைத்து மிகவும் வருந்தினான். தன்னிடம் பணம் இருந்தால் இந்த சிவன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்து அங்கு நடக்கும் எல்லா விழாக்களையும் சிறப்பாக நடத்த முடியும் என்று நினைத்தான்.

இதை நினைத்துக் கொண்டு, வந்த அசதியில் நன்றாக தூங்கி விட்டான். தூக்கத்தில் அந்த சிவன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் மற்றும் இதர விழாக்களை தன் செலவில் செய்வது போன்று கனவு கண்டான்.

இதற்கிடையில் அவன் ஆயுள் முடிந்து விட்டதால் எமதர்மன் அவன் ஆயுளை எடுக்க ஒரு நாகப்பாம்பை அனுப்பி வைத்தார். நாகம் அவன் ஆயுளை பறிக்க வேகமாக வந்தது. அதற்குள் மேலிருந்து ஒரு பெரிய பாறாங்கள் கீழே விழுந்து நாகத்தின் உயிரை பறித்து விட்டது.

எமனுக்கு ஒரே குழப்பம். இது எவ்வாறு நடந்தது. மனிதன் உயிருக்கு பதில் நாகத்தின் உயிர் பிரிந்தது எப்படி? இதற்கான காரணத்தை கேட்டு ப்ரும்மா, விஷ்ணு மற்றும் சிவனிடம் முறையிட்டார்.

அதற்கு மும்மூர்த்திகளும் கூறிய பதில் எமனையே வியப்படைய செய்தது. அந்த இளைஞன் கோவில் கட்டி கும்பாபிஷேகம் (அதுவும் சிவன் கோயில்) மற்றும் விழாக்கள் செய்ய நினைத்த மறு நிமிடமே அவனுக்கு நீண்ட ஆயுள் மற்றும் எல்லா செல்வங்களையும் நாங்கள் கொடுத்து

விட்டோம். இதுவல்ல அவன் உயிர் பிரியும் நேரம். அதை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எமனையே திருப்பி அனுப்பி வைத்து விட்டார்கள்.

மறுநாள் காலை சூரிய உதயத்தில் ஜோசியரை பார்க்க சென்றான். ஜோசியருக்கு ஒரே ஆச்சரியம்! இவன் எப்படி உயிர் பிழைத்து வந்தானென்று? அன்று இரவு நடந்த நிகழ்வுகளை விபரமாக கேட்டறிந்தார்.

ஜோசியர் அவனிடம் எல்லாவற்றையும் விபரமாக விளக்கினார். சிவன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் இதர விழாக்கள் நடத்த நினைத்த மறு நிமிடமே உனக்கு ஆயுள் விருத்தி மற்றும் எல்லா செல்வங்களும் கிடைத்துவிட்டது. இனி உன்னால் முடிந்த வரையில் உன் சம்பந்தப்பட்ட கோவில் திருப்பணி மற்றும் எல்லா விசேஷ விழாக்களையும் சிறப்பாக நடத்தி முடி. உனக்கு எல்லா ஐஸ்வர்யங்களும் கிடைக்க கடவுள் அருள் புரிவார். அந்த இளைஞன் தன் நிலையறிந்து மிகுந்த சந்தோஷத்துடன் ஜோசியரிடமிருந்து விடை பெற்றான்.

இப்போது நம் எல்லோருக்கும் ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. இப்பவும் மயிலாடுதுறை தாலுகா ஆனந்ததாண்டவபுரம் கிராமத்தில் ஸ்ரீ பரஹன் நாயகி, ஸ்ரீ கல்யாண சுந்தரி ஸமேத ஸ்ரீ பஞ்சவடீஸ்வர ஸ்வாமி கோயில் (சிவன் கோயில்) கும்பாபிஷேகம் நடத்த தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. ஆன்மீக அன்பர்கள் அனைவரும் இதில் பங்கெடுத்து நிறைய பொருளுதவி செய்து சிவன் கோயில் கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற உதவுமாறு வேண்டி விரும்பி கேட்டு கொள்கிறோம். தங்களுக்கு தெரிந்த உறவினர்கள், நண்பர்கள் மற்றும் எல்லா ஆன்மிக அன்பர்களையும் தொடர்பு கொண்டு கோயில் திருப்பணி கைங்கரியத்தில் பங்கெடுத்து ஸ்வாமி அருளுக்கு பாத்திரம் ஆகும்படி கேட்டு கொள்கிறோம். மேலும் விபரங்களுக்கு உடனே எங்களை தொடர்பு கொள்ளவும்.


**நாராயணன் சு**
ஆனந்ததாண்டாவபுரம்
**ANP** பக்த ஸமாஜம்
**9884866110**



# ஆனந்ததாண்டவபுரம்
# ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில்
# கும்பாபிஷேகம்

ஆனந்ததாண்டவபுரம் ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் கும்பாபிஷேகம் பக்தர்கள் அனைவரது பேராதரவுடன் வெகு விமரிசையாக 10.12.2023, டிசம்பர் 10ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடந்தது. பொருளுதவி மற்றும் சரீர உதவி செய்த அனைத்து ஆன்மீக அன்பர்களுக்கும் எங்கள் சிரம் தாழ்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

கும்பாபிஷேகம் முடிந்து மண்டலாபிஷேகம் ஆரம்பித்து நல்லபடியாக நடந்து வருகிறது. மண்டலாபிஷேகத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க விரும்பும் ஆன்மீக அன்பர்கள் திரு வெங்கடேஷ் அவர்களை கீழ்கண்ட எண்ணில் தொடர்பு கொள்ளவும். மண்டலாபிஷேக கட்டணம் ரூ. 2000/.

தாங்கள் தங்கள்

அட்ரஸ் : கோத்ரம் :

நக்ஷத்திரம் : ராசி :

ஷர்மா (பெயர்) :

நாள் (அபிஷேகம் தேதி மற்றும் நாள்) :

மற்றும் ரூ. 2000/– அனுப்பி பதிவு செய்து கொள்ளவும். தங்களுக்காக அன்றைய தினத்தில் பூஜை மற்றும் அபிஷேகம் செய்து, பிரார்த்தனை செய்து பிரசாதம் அனுப்பி வைப்பார்கள்.

தங்களுக்கு ஏதேனும் மேலும் விபரம் தேவை என்றால் உடனே எங்களை தொடர்பு கொள்ளவும். மீண்டும் எங்கள் நன்றிகள்.

என்றும் இறை பணியில்

**நாராயணன்**

ANP பக்த சமாஜம்

**9884866110**

# விஷ்ணுபுரம்

அ/மி ஸ்ரீ கைலாசநாதர், அ/மி ஸ்ரீ வரதராஜப் பெருமாள்
அ/மி ஸ்ரீ தர்மபுரீஷ்வரர் ஆலயங்கள்

## திருப்பணி கைங்கர்யப் பத்திரிகை

விஷ்ணுபுரம் வரலாறு

குடவாசல் தாலுகா, திருவாரூர் மாவட்டம் கும்பகோணம் மயிலாடுதுறை மார்க்கமாகச் செல்லும் பேருந்து வழித்தடத்தில் நாச்சியார் கோவில்–பூந்தோட்டம் இடையே அமைதியான பசுமையான இயற்கை சூழல் நிறைந்த அழகிய கிராமம் விஷ்ணுபுரம். காலச்சக்கரம் வேண்டி மகாவிஷ்ணு இத்தலத்தில் தங்கி அருகில் உள்ள ஸ்ரீ விழிநாத ஸ்வாமியை பூஜித்து அதனைப் பெற்றதாக வரலாறு. மகாவிஷ்ணு தங்கி இருந்தமையால் இத்தலத்திற்கு விஷ்ணுபுரம் என்று பெயர் பெற்றது. அவ்வாறு பூஜித்து வர நித்திய பூஜைக்கு ஹேதுவாக காவேரியை மேற்கிலிருந்து வடக்கு நோக்கி பாயச் செய்ததால் இங்கு பாயும் ஹரி சொல் ஆறு என்பது மருவி அரசலாறு என்று அழைக்கப்படுகிறது மேலும் நம் காலத்தில் நடமாடும் தெய்வம் என்று அழைக்கப்பட்ட நம் இதயத்தில் நீங்கா இடம் பிடித்த ஸ்ரீ மஹா பெரியவாளின் குருவான பிரம்மஸ்ரீ சுவாமி சாஸ்திரிகள் வாழ்ந்த பெருமையுடைய மண் நமது விஷ்ணுபுரம் கிராமம். ஸ்ரீ மஹா பெரியவா தன்னுடைய குருகுல வாசத்தின் போது இங்கு தங்கி கற்று பின்னர் பாதயாத்திரை செய்த காலங்களிலும் பலமுறை அவரது பொற்பாதம் இந்த கிராம மண்ணில் பதிந்த பெருமை உடையது

## ஸ்ரீ வரதராஜப் பெருமாள்

இத்தலத்தில் மஹாவிஷ்ணு வாசம் செய்த காரணத்தால் நமது முன்னோர்களால் ஸ்ரீ வரதராஜ பெருமாளுக்கு அழகிய ஆலயம் நிர்மாணம் செய்து இன்றளவும் அவருக்கு பூஜைகள் நன்கு நடைபெற்று வருகின்றது. தனது பெயருக்கு ஏற்றார் போல் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அள்ளித்தந்து அருளாசி புரிந்து வருகின்றார்.

## ஸ்ரீ தர்மபுரீஷ்வரர்

முன் ஒரு காலத்தில் தர்மராஜன் ஸ்வேதகேதுவை வதம் செய்து தோஷ நிவர்த்தி ஏற்படும் பொருட்டு இங்கு உள்ள சிவலிங்கத்தை பூஜை செய்து வந்துள்ளார். பொதுவாக க்ஷேத்திர விசேஷங்களை தல வரலாறு, கோவில்கள் மற்றும் நதிகள் என மூன்றில் ஒன்றை முன்னிருத்தி ஸ்லாகித்துச் சொல்வது வழக்கம். ஆனால் நமது விஷ்ணுபுரமானது இம்மூன்று விதங்களிலும் சாலச்சிறந்த ஸ்தலமாக அமையப்பெற்றது நமது பாக்கியமாகும். இந்த புகழ்பெற்ற ஸ்தல நாயகர்களான ஸ்ரீ கைலாச நாதர், ஸ்ரீ வரதர் மற்றும் ஸ்ரீதர்மபுரீஷ்வரர், அவரவர்கள் பரிவார தேவதா மூர்த்தங்களுடன் நமது கிராமத்தில் வீற்றிருந்து நமக்கெல்லாம் அருள்பாலிக்கின்றனர். அவர்கள்தம் திருக்கோவில்களை புனருத்தாரணம் செய்து நமது காலங்களில் ஸம்ப்ரோக்ஷணங்கள் நடத்த நாம் அனைவரும் ஒன்றுகூடி முனைந்து செயல்படுவது நாம் செய்த தவம் எனலாம். கடந்த **01/11/2023** அன்று பாலாலயம் சிறப்பான முறையில் நடைபெற்றது. வரும் பங்குனி மாதம் **22**ம் தேதியில் **04/04/2024**

(வியாழன்) இரண்டு சிவன் கோயில்களுக்கும், பங்குனி மாதம் 23ம் தேதியில் 05/04/2024 (வெள்ளி) வரதராஜப் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு தோராயமாக செலவு 90 லட்சத்திற்கும் மேல் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு ஊர்மக்கள் மற்றும் ஆஸ்திக அன்பர்கள் அனைவரையும் தங்களாலான பொருள் மற்றும் இதர உதவிகளை செய்து இந்த மாபெரும் யக்ஞத்தினை நடத்தித்தருமாறு தங்களிடம் சிரம் தாழ்த்தி வேண்டி விண்ணப்பிக்கின்றோம்.

## ஸ்ரீ கைலாசநாதர்

ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோவிலில் உள்ள சிவலிங்கமானது, ஸ்கந்த புராணத்தின்படி, த்ரேதா யுகத்தில் (ராமர் வாழ்ந்த காலம்) வாழ்ந்த கௌதம மகரிஷியினால் ஸ்தாபனம் செய்து பூஜித்து வந்ததாக கூறப்பட்டுள்ளது.

**QR Code for Transfer**

**BANK DETAILS FOR SENDING YOUR CONTRIBUTIONS:**
**A/c. Name: VPM COMMITTEE**
**A/c. Number: 500101013197269**
**IFSC Code: CIUB0000011**
**Bank Name: CITY UNION BANK LTD**
**Branch: ERAVANCHERRY**

Please do not forget to send a screenshot / SMS confirmation of online transfers to +91 97318 64646 / vpmcommittee@gmail.com with your full name, address and phone number so that we can issue the E-Receipt for your valuable contributions and update our database for sending prasadam.

இப்படிக்கு,
கிராம வாசிகளுடன் இணைந்து
விஷ்ணுபுரம் கும்பாபிஷேக கமிட்டி (VPM கமிட்டி) உறுப்பினர்கள்.

# வாழ்த்துகள்



நமது உறுப்பினர் ஸ்ரீமதி இந்திரா வைத்தியநாதன் அவர்கள் கும்பகோணத்தில் அருள்நெறி பரப்பி ஆன்மீக தொண்டாற்றி, புண்ணிய வைபவங்கள் பல திறம்பட நடத்தி வருகிறார். அதன் பொருட்டு ஸ்ரீ காமாக்ஷி மண்டலியினரால் கௌரவிக்கப்பட்டு பாராட்டு மடல் பெற்றார். அவரது இறைத் தொண்டு மேன்மேலும் சிறக்க சமாஜத்தின் சார்பாக பாராட்டுக்கள்.





Dr. Arvind Venkatraman an ophthalmologist runs Dr. Arvind Vision Care in Chennai and kumbakonam. He has been awarded gold medal for excellence in Implantable Contact lens Surgery. This is done for patients with high power to make them glass free. The award ceremony happened in Bangalore. Samajam wishes him for his achievement.



கல்வி சக்தி இயக்கத்தின் பயிற்சி இலங்கையில் முல்லைத்தீவு மற்றும் முள்ளிவாய்க்காலில் துவங்கப்பட்டது. மேலும் இந்த இலவச பயிற்சி 200 மையங்களில் வழங்கப்படுகிறது. ஸ்ரீ நாகோஜி அவர்களின் இந்த உயரிய பணி மேன்மேலும் சிறக்க சமாஜத்தின் வாழ்த்துக்கள்.

---




மைலாப்பூர் டைம்ஸ் நடத்திய Pongal Photography Contest-ல் நமது உறுப்பினர் ஸ்ரீமதி ஞானம் அவர்களது பாரம்பரிய பொங்கல் படைப்பிற்கு பரிசு வழங்கப்பட்டது.

---

Mylapore Festival நடத்திய Mylapore neighbourhood பற்றிய Quiz போட்டியில் முதல் பரிசு பெற்ற ஸ்ரீ ராஜகோபாலன் (கோபு) & ஸ்ரீமதி ஜயகமலா ராஜகோபாலன் தம்பதியனருக்கு வாழ்த்துகள்.



## கடந்த ஆண்டில் (2023) ஆயுள் உறுப்பினரிலிருந்து (LM) புரவலர் உறுப்பினர்களாக (PM) தங்களை உயர்த்திக் கொண்ட அங்கத்தினர்கள் பட்டியல்

| S.No | Name | Member No | Village |
|---|---|---|---|
| 1 | SRI S.R. SUBRAMANIAM | PM 012 | SENGALIPURAM |
| 2 | SRI S.A. BALASUBRAMANYAN | PM 046 | MUDIKONDAN |
| 3 | SRI V.K. MURTHI | PM 056 | THATTATHIMOOLAI |
| 4 | SRI V. GANESAN | PM 067 | PULIYUR |
| 5 | SRI S. GOPALAN | PM 101 | TIPPIRAJAPURAM |
| 6 | SRI N. VENKATARAMAN | PM 102 | NALLUR |
| 7 | SRI S. NARAYANAN | PM 103 | ANANDATHANDAVAPURAM |
| 8 | SRI M. NARAYANAN | PM 106 | TIPPIRAJAPURAM |
| 9 | SRI V. RAMAMURTHI | PM 119 | MUDIKONDAN |
| 10 | SRI K.R. GANESAN | PM 124 | KONERIRAJAPURAM |
| 11 | SRI T.V. VISWANATHAN | PM 130 | THEDIYUR |
| 12 | SRI S. ADI RAMAN | PM 133 | MUDIKONDAN |
| 13 | SRI R. SANKARA SUBRAMANIAN | PM 134 | MUDIKONDAN |
| 14 | DR K. VENKATARAMAN | PM 155 | VISHNUPURAM |
| 15 | SRI M.V. GOPALAKRISHNAN | PM 160 | MARATHURAI |
| 16 | SRI R. SOLESWARAN | PM 164 | SENGALIPURAM |
| 17 | SRI K. KASINATHAN | PM 166 | SENGALIPURAM |
| 18 | SRI T.R. JAYARAMAN | PM 168 | THEDIYUR |
| 19 | SRI K. RAJARAMAN | PM 177 | THEDIYUR |
| 20 | SRI A. SANKARAN | PM 180 | KOTHAVASAL |
| 21 | SRI S. SUNDAR | PM 182 | VISHNUPURAM |
| 22 | SRI V. JANAKIRAMAN | PM 183 | THEDIYUR |
| 23 | SRI R. NARAYANAN | PM 197 | MOZHAIYUR |
| 24 | SRI S.MATHRUBOOTHAM & S.DORAIMANI | PM 231 | TRICHY |
| 25 | SRI K. SUBRAMANIAN | PM 237 | MAANTHAI |
| 26 | SRI C.R. VENGATRRAMON | PM 252 | VEDARANYAM |

| S.No | Name | Member No | Village |
|---|---|---|---|
| 27 | SRI A. REGURAMAN | PM 273 | THATTATHIMOOLAI |
| 28 | SRI V. PANCHAPAKESAN | PM 278 | MUDIKONDAN |
| 29 | SRI P. RAJARAMAN | PM 280 | TIPPIRAJAPURAM |
| 30 | SRI R. VISWESWARAN | PM 293 | ANANDATHANDAVAPURAM |
| 31 | SRI S. BALASUBRAMANIAN CUB | PM 300 | MELAPALAIYUR |
| 32 | SRI N. KRISHNAMURTHY | PM 302 | ANANDATHANDAVAPURAM |
| 33 | SRI M. VENKATARAMAN | PM 315 | MELAPALAIYUR |
| 34 | SRI V. SRIRAMAN | PM 325 | MUDIKONDAN |
| 35 | SRI J. VISWANATHAN | PM 326 | KONERIRAJAPURAM |
| 36 | SRI G. SWAMINATHAN | PM 338 | THEDIYUR |
| 37 | SRI P. KRISHNAN | PM 371 | PULIYUR |
| 38 | SRI R. GOPAL | PM 374 | TIPPIRAJAPURAM |
| 39 | SRI S. KASINATHAN | PM 381 | KONERIRAJAPURAM |
| 40 | SRI S. VISWANATHAN | PM 398 | ANANDATHANDAVAPURAM |
| 41 | SRI R. KALYANARAMAN | PM 400 | ARASAVANANGADU |
| 42 | SRI R. SIVAKUMARAN | PM 439 | TIPPIRAJAPURAM |
| 43 | SRI K. ARUNACHALAM | PM 466 | THEDIYUR |
| 44 | SRI V.S.SUNDARARAMAN | PM 470 | PULIYUR |
| 45 | SRI S.GANESAN | PM 475 | KOONTHALOOR |
| 46 | SRI S.SUNDARESAN | PM 482 | AGARAPETTAI |
| 47 | SRI S.JAYARAMAN | PM 510 | SEMMANGUDI |
| 48 | DR V. ARVIND | PM 511 | VISHNUPURAM |
| 49 | SRI V. VIJAYA BASKAR | PM 519 | VARAHUR |
| 50 | SRI V. RAMANATHAN | PM 525 | SEMMANGUDI |
| 51 | SRI N. RAMESH | PM 565 | ANANDATHANDAVAPURAM |
| 52 | SRI S. GANESAN | PM 598 | THEDIYUR |
| 53 | SRI V. SWAMINATHAN | PM 604 | THEDIYUR |

| S.No | Name | Member No | Village |
|---|---|---|---|
| 54 | SRI S. GANESAN | PM 613 | THEDIYUR |
| 55 | SRI V. NARAYANAN | PM 646 | KONERIRAJAPURAM |
| 56 | SRI K. RAVI | PM 659 | MARATHURAI |
| 57 | SRI VISWANATH GOPALAN | PM 662 | TIPPIRAJAPURAM |
| 58 | SRI V. RANGAN | PM 665 | THAPPALAM PULIYUR |
| 59 | SRI K.S JAYARAMAN | PM 667 | KONERIRAJAPURAM |
| 60 | SRI N. KALYANASUNDARAM | PM 689 | VISHNUPURAM |
| 61 | SRI V. CHANDRASEKARAN | PM 692 | SITHANVAZHOOR |
| 62 | SRI M. SUBRAMANIAN | PM 708 | TIPPIRAJAPURAM |
| 63 | SRI M. BALASUBRAMANIAN | PM 709 | ANANDATHANDAVAPURAM |
| 64 | SRI K. SUBRAMANIAN | PM 237 | MAANTHAI |
| 65 | SRI R.S. VISWANATH | PM 850 | VEDARANYAM |
| 66 | SRI P NAGARAJAN | PM 880 | THEDIYUR |
| 67 | SRI R. ARAVIND IYER | PM 851 | DARASURAM |
| 68 | SRI S. SURESH | PM 422 | MARATHURAI |
| 69 | SRI VENKATESH BALAKRISHNAN | PM 813 | THEDIYUR |
| 70 | SRI V SEETHARAMAN | PM 807 | MAPPADUGAI |
| 71 | SRI S LAKSHMI NARAYANAN | PM 905 | MAANTHAI |
| 72 | SRI R. VENUGOPAL | PM 779 | VALADY |
| 73 | SRI N.M. BHARATHI | PM 830 | KONERIRAJAPURAM |
| 74 | SRI V RAMDAS | PM 819 | MAANTHAI |
| 75 | SRI S. PICHAI | PM 311 | ARASAVANANGADU |
| 76 | SRI V SUNDARRAMAN | PM 780 | ANANDATHANDAVAPURAM |
| 77 | SRI V JAYASHANKAR | PM 877 | ANANDATHANDAVAPURAM |
| 78 | SRI P. KUNCHITHAPATHAM | PM 529 | SEYYAMANGALAM |
| 79 | SRI B. SANKARAN | PM 843 | THEDIYUR |
| 80 | SRI R. BALASUBRAMANIAN | PM 499 | TRICHY |

**செயற்குழுவின் வேண்டுகோளை ஏற்று புரவலர் உறுப்பினர்களாக உயர்த்திக் கொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் சமாஜத்தின் சார்பாக நன்றிகள்.**

## கடந்த ஆண்டு (2023) புதிய உறுப்பினராக சேர்ந்தவர்கள் பட்டியல்

| S.no | Name | Number | Village |
|---|---|---|---|
| 1 | G. Gurumurthi | PM 950 | Mudikondan |
| 2 | S. Suganth | PM 951 | Sengalipuram |
| 3 | N. Rajeswari | PM 952 | Thediyur |
| 4 | R. Aravind | PM 953 | Thediyur |
| 5 | R. Balaganesan | PM 954 | Arasavanangadu |
| 6 | B.S. Mohan | PM 955 | Radhamangalam |
| 7 | P. Vaidyanathan (Dilip) | PM 956 | Thediyur |
| 8 | S.P. Sundararaman | PM 957 | Sengalipuram |
| 9 | A. Radha Anand | PM 958 | Anandathandavapuram |
| 10 | Kaushik Ram Murthi | PM 959 | Thattathimoolai |
| 11 | S. Rajagopalan | PM 960 | Thediyur |
| 12 | S. Ramachandran | PM 961 | Thediyur |

### புதிய உறுப்பினர்களை வரவேற்கிறோம்

## கடந்த ஆண்டு (2023) சமாஜத்திற்கு நன்கொடை அளித்தவர்களின் பட்டியல்

| | | |
|---|---|---|
| Ramamurthy | Rs. | 10000 |
| SundaraRaman | Rs. | 12000 |
| Venkataraman | Rs. | 100000 |
| Gowrisankar | Rs. | 3600 |
| Jayaraman | Rs. | 10000 |
| Ramesh | Rs. | 5000 |
| Suganya | Rs. | 10000 |
| Narayanan | Rs. | 5000 |
| V Raman | Rs. | 3000 |
| Seetha | Rs. | 3000 |
| Ramakrishnan | Rs. | 3000 |
| Anantharaman | Rs. | 3000 |
| Sundar Raman | Rs. | 28000 |
| Gowrisankar | Rs. | 10000 |
| Ganeshram | Rs. | 10000 |
| Ganesh Srinivasan | Rs. | 10000 |
| **Total** | Rs. | **225600** |

**கடந்த ஆண்டு கல்வி உதவித்தொகை ரூ. 2,41,600 மற்றும் வேத பாடசாலைகளுக்கு ரூ. 60,000 சமாஜத்தின் சார்பில் நிதி உதவி வழங்கியுள்ளோம். உறுப்பினர்களின் நன்கொடையால் மட்டுமே இத்தகைய நற்செயல்கள் சாத்தியம். உறுப்பினர்கள் தொடர்ந்து ஆதரவு அளித்து நமது சமாஜத்தின் கரங்களை மேன்மேலும் வலுப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

## காலமானார் - வருந்துகிறோம்

- நமது உறுப்பினர் விஷ்ணுபுரம் திரு. கல்யாணசுந்தரம் அவர்களின் தர்ம பத்தினி ஸ்ரீமதி யோகம் (74 years) அவர்கள் **11–11–23** அன்று சிவலோக பிராப்தி அடைந்தார். அவர் நமது உறுப்பினர்கள் ஸ்ரீமதி ஜயந்தி நடேசன், ஸ்ரீ ஸ்ரீதரன் (பூனா) மற்றும் ஸ்ரீ ஜயராமன் ஆகியோரின் தாயார் ஆவார்.

- நமது உறுப்பினர் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் **(74)** அவர்கள் **23–11–23** அன்று திருச்சி கீழ்கண்டார்கோட்டையில் காலமானார். இவரது துணைவியார் ஸ்ரீமதி லலிதா, மகன் ஸ்ரீ பாலாஜி பெங்களூரு, மகள் ஸ்ரீமதி ராஜேஷ்வரி மற்றும் சகோதரி ஸ்ரீமதி விஜயா ஆவார்கள்.

- நமது உறுப்பினர் மாந்தை Dr. ஸ்ரீ கோபாலன் **(73)** (LM 349) அவர்கள் **7–11–2023** அன்று சென்னையில் காலமானார். இவர் நமது சமாஜத்தில் பல மருத்துவ முகாம்கள் நடத்தியுள்ளார்.

- நமது உறுப்பினர் ஸ்ரீ G.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் **18–12–2023** அன்று சென்னையில் காலமானார். இவர் சங்கீத பிதாமகர் செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யர் அவர்களின் மாப்பிள்ளை ஆவார். மேலும் சின்மயா மிஷன் சென்னை பிரிவிற்கு பல ஆண்டுகள் செயலாளராக இருந்துள்ளார்.

- ஆனந்ததாண்டவபுரம் ஸ்ரீமதி P.சுந்தராம்பாள் (குன்னுவாம்) அவர்கள் **20–12–2023** அன்று ஆனந்ததாண்டவபுரத்தில் ஸ்ரீ க்ருஷ்ண சரணம் அடைந்தார். இவர் நமது அங்கத்தினர்கள் ஸ்ரீமதி ஜெயா மற்றும் ஸ்ரீமதி அம்புலு அவர்களின் தாயார் ஆவார்.

நமது கிராமங்களில் சங்காபிஷேகம்



மொழையூர் சிவன் கோவில்



ஸ்ரீ வ்யாக்ரபுரீஸ்வரர் ஆலயம் புலியூர்



முடிகொண்டான் ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோவில்



திருக்கோடிகாவல் ஸ்ரீ திருக்கோடீஸ்வரர் ஆலயத்தில்
கார்த்திகை ஞாயிறு தீர்த்தவாரி






சித்தன்வாழூர் கோவில்களில் தீபாவளி சிறப்பு அபிஷேகம்

CUB
Trust and Excellence
Since 1904
CITY UNION BANK LTD

## மார்கழி இசை விழாவில் மாத்யமர்கள்



“கந்தர்வ லோகத்தில் ஒரு இசை மாநாடு “
என்ற இசை நாடகத்தில் MS அம்மா வேடம் ஏற்ற
முடிகொண்டான் ஸ்ரீமதி K.காயத்ரி ப்ரசன்னா




வித்வான் முடிகொண்டான்
ஸ்ரீ S.N. ரமேஷ் மற்றும் ஸ்ரீமதி R. சௌம்யா

## நமது கிராமங்களில் ஆருத்ரா உத்ஸவம்




தேதியூர் குமாரி N.ஆர்யா



விஷ்ணுபுரம் குமாரி சுபத்ரா ஸ்ரீதரன்




திப்பிராஜபுரம் ஸ்ரீ ஹரிகிருஷ்ணா மிருதங்கம்



மாப்படுகை ஸ்ரீ ஸ்ரீஹரி மிருதங்கம்




மாந்தை ஸ்ரீ அபினவ் கணேசன் ஸ்ரீ அனிருத் கணேசன்
இரட்டை சகோதரர்களின் மிருதங்கம்

**Printed by : RST OFSET PRINTERS, Mylapore, Chennai - 600 004. Ph : 044 2466 2054**